**செ. கு. எண்: 121** **நாள் : 02.11.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.11.2015

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஒப்பந்த பணியாளராகப் பணி புரிந்து வந்த ரங்கநாதன் என்பவர் 28.9.2015 அன்று மூலசிட்லிங் பகுதியில் மின்மாற்றியைப் பழுது பார்க்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், கெருகம்பாக்கம் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஒப்பந்த பணியாளராகப் பணி புரிந்து வந்த கிருஷ்ணன் என்பவர் 3.10.2015 அன்று கெருகம்பாக்கம் அருகே மின்கம்பம் நடும் பணியை மேற்கொண்டிருந்த போது, மேல்நிலை உயர்மின் அழுத்தக் கம்பி, கம்பத்தின் மீது உரசியதால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சங்கராபுரம் பிரிவு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் ஒப்பந்த பணியாளராகப் பணி புரிந்து வந்த பாக்கம் புதூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் 3.10.2015 அன்று சங்கராபுரம் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அருகே பழுதடைந்த மின்கம்பத்தை சீர் செய்யும் பணியினை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**